## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.86/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஈஸ்வரி (எ) தேவி | மதம் | : இந்து |
| க/பெ | : கருணாகரன் | ஜாதி | : -- |
| வயது | : 54 | கிராமம் | : காவனூர் |
| தொழில் | : கூலி | வட்டம் | : அரக்கோணம் |

**18.12.2024**

**<u>பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என் தாத்தா கோட்டி சாமைய்யா என்ற வடக்கைய்யாவிற்கு சித்திரை, கொள்ளாபுரி, அரசன் ஆகிய மூவர் மக்கள் என்றால் இல்லை. 4 பேர் ஆவார்கள். பொன்னன், சித்திரை, கொள்ளாபுரி, அரசன் ஆகியோர்கள் ஆவார்கள். கொள்ளாபுரி வாரிசான ஆதிமூலம், சித்திரை வாரிசுகளான சின்ன துரை மற்றும் துரை எனக்கு சகோதரர்கள் உறவு என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து ஆதியில் என் தாத்தா சொத்து என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் தாத்தா அவர் பிள்ளைகளுக்கு எழுதிகொடுத்ததை என் அப்பாவுக்கு விற்றுவிட்டார்கள்.

2. 1945ல் இருந்து என் அப்பா அனுபவித்து வருவதாக சொல்லியுள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் அப்பா சொல்லியுள்ளார். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பட்டா பாஸ்புக் எண்.201 அரசன் பெயரில் உள்ளது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் மறந்துவிட்டேனா என்று தெரியவில்லை. ஆனால் என் அப்பா பெயரில்தான் 201ல் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என் அப்பா திருமணத்திற்காக 1950ல் அடமானம் வைத்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் என் அப்பா அடமானம் வைத்தார். எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளதா என்று தெரியவில்லை.

3. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 2 அடமான ஆவணத்தில் புல

எண்.138/4 என்றுதான் உள்ளது என்றாலும் வழக்கு புல எண்.138/6 என குறிப்பிடப்படவில்லை என்றாலும் வழக்கு சொத்து 138/6 தான். ஆனால் அதில் புல எண் மாறியுள்ளது. 1974 ல் இருந்து என் அப்பா வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு அனுபவித்து வந்திருந்தால் நான் சாகுபடி அடங்கல் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அங்கு தண்ணீர் இல்லாததால் பயிர் செய்ய இயலவில்லை. வேலிக்காத்தான் மரங்களை வெட்டி அனுபவித்து வந்தோம்.

4. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1984 ல் UDR பட்டா கொடுத்ததாக சொல்லியுள்ளதில் அந்த UDR பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வருடம் ஒரு முறை வேலிக்காத்தான் மரங்களை வெட்டி அனுபவித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வழக்கு சொத்தில் வாதி வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றாலும் இல்லை. நான்தான் வேலிக்காத்தான் மரங்களை வெட்டி அனுபவித்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1962, 1964 மற்றும் 1971 ல் என் அப்பா வரி செலுத்தியதாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தெரியவில்லை. ஆனால் நாங்கள் வரி கட்டியுள்ளோம்.

5. என் அப்பா இந்நீதிமன்றத்தில் ஆதிமூலம், துரை, ஜெயபால் மீது என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என் அப்பா அவரது நிலம் என்று வழக்கு தாக்கல் செய்தார். ஆதிமூலம் 19 செண்ட்டை குப்பனுக்கு கிரையம் கொடுத்ததில் ஜெயபால் மற்றும் துரையை தவறாக சேர்த்து என் அப்பா அ.வ.எண்.616/1989 என வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர்கள் எங்களிடம் பிரச்சனை செய்ததால் வழக்கு தாக்கல் செய்தார். அ.வ.எண்.616/1989 ல் ஜெயபால் கிரையம் வாங்கவும் இல்லை மற்றும் துரை யாருக்கும் சொத்தை கிரையம் கொடுக்கவில்லை என்பதால்தான் வழக்கில் ஆஜராகவில்லை என்றால் துரையும், ஆதிமூலமும் எங்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள்.

6. என் அப்பா தாக்கல் செய்த அ.வ.எண்.616/1989 வழக்கில் புல எண்.138/6 ல் 23 செண்ட்க்கு மட்டும்தான் என் அப்பா பரிகாரம் கேட்டுள்ளார் என்றாலும் 57 செண்ட்க்கு என் அப்பா பரிகாரம் கேட்கவில்லை என்றாலும் 57

செண்ட்டிற்குதான் என் அப்பா வழக்கு தாக்கல் செய்துள்ளார். புல எண்.138/6 ல் 57 செண்ட்டில் 3 பேருக்கும் பங்கு உள்ளது என்றாலும் என் அப்பாவிற்கு மட்டும் பாத்தியம் இல்லை என்றாலும் சரியல்ல. என் அப்பா தாக்கல் செய்த அ.வ.எண்.616/1989 வழக்கில் துரையை மட்டும்தான் வழக்கில் சேர்த்துள்ளார் என்றாலும் துரைராஜை சேர்க்கவில்லை என்றால் தெரியவில்லை. அவர்கள் இருவரையும் துரை என்றுதான் அழைப்போம். பெரிய துரை, சின்ன துரை என்று அழைப்பார்கள்.

7. அ.வ.எண்.616/1989 ல் வாதி மற்றும் வாதிக்கு கிரையம் கொடுத்த துரைராஜ் இருவரும் தரப்பினராக இல்லாத நிலையில் அந்த வழக்கின் பிரதிவாதியான துரை மற்றும் துரைராஜ் மேல்முறையீடு செய்ய தேவையில்லை என்றால் அவர்கள் எங்கள் சொத்து என்பதால்தான் அதன் பின்பு அவர்கள் வரவில்லை. அ.வ.எண்.616/1989 ல் வாதிக்கு கிரையம் கொடுத்த துரைராஜ் இருவரும் தரப்பினராக இல்லாத நிலையில் அந்த வழக்கின் தீர்ப்பாண பி.வா.சா.ஆ 9 அந்த வழக்கின் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதி பொய்யான ஆவணத்தை தயாரித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளதில் வாதி மீது காவல் நிலையத்திலோ பதிவாளர் அலுவலகத்திலோ ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

8. 1999 ல் என் அப்பா அரசன் மற்றும் என் அம்மா காவேரிராஜபுரத்தில் இருந்தார்களா அல்லது என்னுடன் காவனுரில் இருந்தார்களா என்றால் வந்து வந்து போவார்கள். இங்கு ஒரு மாதம், அங்கு ஒரு மாதம் என்று இருப்பார்கள். 1991 ல் வாதி தாவா சொத்தை கிரையம் வாங்கிய விவரம் என் அப்பாவிற்கு தெரியும் என்றால் என் அப்பாவிற்கு தெரியாது. **(சாட்சி கண் கலங்கி அழுதார்)**

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)